# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண்.208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை- 600 106
தொலைபேசி எண் : 2363 5010, 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் – tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண் 03/2020 நாள் 04.01.2020

தமிழ்நாட்டில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்களுக்கான வாக்குப்பதிவு அரியலூர், கோயம்புத்தூர், கடலூர், தர்மபுரி, திண்டுக்கல், ஈரோடு, கன்னியாகுமரி, கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், நீலகிரி, தேனி, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருப்பூர், திருவள்ளூர், திருவண்ணாமலை, திருவாரூர் மற்றும் விருதுநகர் ஆகிய 27 மாவட்டங்களில் இரண்டு கட்டங்களாக 2019 டிசம்பர் 27 மற்றும் 30 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.

ஊரக உள்ளாட்சிகளில் மொத்தம் 91,975 பதவியிடங்களை நிரப்பிட நேரடித் தேர்தல் நடைபெற்றது. இதில், 27 மாவட்ட ஊராட்சிகளுக்கு உட்பட்ட 515 மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்களும், 314 ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட 5,090 ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் பதவியிடங்களும், 9,624 கிராம ஊராட்சித் தலைவர் பதவியிடங்களும் மற்றும் 76,746 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்களும் அடங்கும்.

இதில், கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்களில் 18,137 பதவியிடங்களுக்கும், கிராம ஊராட்சி மன்றத் தலைவர் பதவிகளில் 410 பதவியிடங்களுக்கும், ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்களில் 23 பதவியிடங்களுக்கும், என மொத்தம் 18,570 பதவியிடங்களுக்கு வேட்பாளர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இத்தேர்தலில் முதல் கட்ட வாக்குப்பதிவு 24,680 வாக்குச்சாவடிகளிலும், இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு 25,008 வாக்குச்சாவடிகளிலும், மொத்தம் 49,688 வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவு நடைபெற்றது. 27.12.2019 அன்று நடைபெற்ற முதல் கட்ட தேர்தலில் 77.10 சதவிகித வாக்குகளும், 30.12.2019 அன்று நடைபெற்ற இரண்டாம் கட்ட தேர்தலில் 77.73 சதவிகித வாக்குகளும் பதிவாகியுள்ளன.

முதல் கட்ட தேர்தலில் 30 வாக்குச்சாவடிகளுக்கு வழங்கப்பட்ட வாக்குச்சீட்டுகளின் சின்னங்கள் குறைபாடுகள் இருந்ததால் 30.12.2019 அன்று மறுவாக்குப்பதிவு நடைபெற்றது. இந்த மறுவாக்குப்பதிவில் 72.70 சதவிகிதம் வாக்குகள் பதிவாகியது. இரண்டாம் கட்ட தேர்தலில் இது போன்ற நிகழ்வால் 9 வாக்குச்சாவடிகளில் 01.01.2020 அன்று மறுவாக்குப்பதிவு நடைபெற்றது. இதில் 59.42 சதவிகிதம் வாக்குகள் பதிவாகியுள்ளது. இரண்டு கட்ட வாக்குப்பதிவு மற்றும் மறுவாக்குப்பதிவுகளில் மொத்தமாக 77.46 சதவிகிதம் வாக்குகள் பதிவாகியுள்ளன.

வேட்பாளர் இறப்பு காரணமாக திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை ஊராட்சி ஒன்றியம், கே.பெரியபட்டி கிராம ஊராட்சி வார்டு எண் 2 மற்றும் திருவாரூர் மாவட்டம், கொடவாசல் ஊராட்சி ஒன்றியம், செருகுடி கிராம ஊராட்சி வார்டு எண் 1 மற்றும் திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஊராட்சி ஒன்றியம், சென்னாகரம் கிராம ஊராட்சி வார்டு எண் 1 ஆகியவற்றில் போட்டியிட்ட வேட்பாளர்கள் இறப்பால் தள்ளி வைக்கப்பட்டன.

போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்கள் 23.12.2019ல் வெளியிடப்பட்ட துணை வாக்காளர்கள் பட்டியலில் நீக்கம் செய்யப்பட்டதால் 25 பதவியிடங்களுக்கு வாக்கு எண்ணுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தலைமை தேர்தல் அலுவலர் அவர்களிடமிருந்து அறிக்கை பெறப்பட்டதும் விரைவில் இந்த வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

வாக்கு எண்ணும் மையங்களில் மூன்று அடுக்கு பாதுகாப்பிற்காக காவல்துறையைச் சார்ந்த 30,354 உயர்அலுவலர்கள், காவலர்கள் இப்பணியில் ஈடுபட்டனர். வாக்கு எண்ணும் பணியில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 3,000 முதல் 5,500 வரையிலான பணியாளர்கள் வீதம் சுமார் 1,00,000 மேற்பட்ட பணியாளர்கள் ஈடுபட்டனர்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தினால் நியமனம் செய்யப்பட்ட ஒரு இந்திய ஆட்சிப் பணி அலுவலர் தேர்தல் பார்வையாளர்களாக பிற பணிகளோடு வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணும் பணியினையும் கண்காணித்தனர். ஒவ்வொரு வாக்கு எண்ணும் மையத்திலும் மத்திய அரசு நிறுவனங்களைச் சேர்ந்த 6 அலுவலர்கள் நுண்பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டு மொத்தம் சுமார் 1,890 நுண்பார்வையாளர்கள் வாக்கு எண்ணும் பணிகளை மேற்பார்வையிட்டனர்.

27 மாவட்டங்களில் நடைபெற்ற ஊரக உள்ளாட்சித் தேர்தலில் பதிவான வாக்குகள் 315 வாக்கு எண்ணும் மையங்களில் 02.01.2020 காலை 08.00 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்கி முடிவுகள் அறிவிக்கப்பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் / தலைவர்கள் 06.01.2020 அன்று காலை 10.00 மணிக்கு பதவியேற்பு செய்து கொள்வார்கள். தேர்தல் தொடர்பாக 01.12.2019 முதல் இன்று வரை 712 புகார் மனுக்களும், தொலைபேசி மூலம் 1,082 புகார்களும் பெறப்பட்டு ஆணையத்தால் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு புகாரில் தெரிவிக்கப்பட்ட குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டன.

வாக்கு எண்ணும் பணியினை அமைதியாகவும், நேர்மையாகவும், சுதந்திரமாகவும் தேர்தல் பணியில் ஈடுபட்ட அலுவலர்கள் மேற்கொண்டனர். மேலும், தேர்தல் தொடர்பான செய்திகளை காட்சி ஊடகங்கள் மற்றும் அச்சு ஊடகங்கள் வழியாக மக்களுக்கு சிறப்பான முறையில் கொண்டு சேர்த்தனர். அவர்களுக்கும், தேர்தலில் வாக்களித்த வாக்காளர்கள், வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கை பணியில் ஈடுபட்ட அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள், காவல் கண்காணிப்பாளர்கள், தேர்தல் பார்வையாளர்கள், தேசிய தகவல் மையம், அரசு அலுவலர்கள், காவல் துறை அலுவலர்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள், காவலர்கள் அனைவருக்கும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் சார்பாக தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையாளர் நன்றியினை தெரிவித்துக் கொண்டார்.

அனைத்து அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களும் பல்வேறு வினாக்கள், தெளிவுரைகள், சந்தேகங்களை எழுப்பினர். இவைகளுக்கெல்லாம் உரிய பதில்கள் அளிக்கப்பட்டன. அவர்களுக்கு திருப்தி ஏற்படும் வகையில் நடவடிக்கைகள் உடனுக்குடன் மேற்கொள்ளப்பட்டது. அவர்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்வதாக தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் தெரிவித்தார்.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)

4/1/2020
மக்கள் தொடர்பு அலுவலர்